**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**



# Contemporary Life of Women

**Dr. I. K. Viji,** Assistant Professor of Tamil, Sree Ayyappa College for Women, Kanyakumari, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2019-0919**
**DOI: 10.5281/zenodo.14752736**

## Abstract

*India is proud to respect women like no other country in the world. "To be born as a bridegroom, mother should have a good period" sung by the Tamil poet Vinayakam Pillai. However many women are not often treated equally with respect in today's society. Many women with courage and faith have accomplished astonishing feats in Indian history. What they started in the past has helped the present day women to gain their hold in various fields. The Tamil saying says that women have a nurturing nature inborn within them. Women are achieving par excellence with men. Today, women tread from the house to the space. A situation where 'no man is equal to a woman' may soon come rather than 'a woman equal to a man'. In reality, rather than a calm and meek woman, brave and intelligent women are prominent in the top ranks of success. Only when a woman is hopeful to go outside the vast world can make her personal life successful. It is not an exaggeration to say that her self-respect is not only for herself but also for her future generations. Therefore, search is essential for every woman because achievement can only be achieved while searching. If one wants success in life one has to create opportunities. During the life journey of every woman, they can come across obstacles and hurdles with the help of her knowledge. This article focuses on the life of contemporary women.*

**Keywords:** Women, Social Service, Feminism, Struggle, Politics.

## References

[1] Augustine, S. & Kalavathi, T. S. Dr. "Peniya Kattamaippum Amma Vanthalil Penniya Kattamaippum." *International Journal of Tamil Language and Literature.* Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.
[2] Anthony Suresh, J. Dr. "Silambil Magalir Iruthal Nilaikalum Penniya Kattamippum." *International Journal of Tamil Language and Literature*. Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.
[3] Anitha, N. Dr. "Samayangalum Pen Viduthalaiyum." *International Journal of Tamil Language and Literature.* Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.
[4] Anusuya, I. Dr. "Pengalum Alumai Thiranum." *International Journal of Tamil Language and Literature*. Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140,
[5] Rajam Krishnan. *Kalanthorum Pen.* National Book Trust, India, First Edition-1994.
[6] Ezhilarasi, M. S. "Viviliyathil Penniya Kurugalum Veera Pengalum." *International Journal of Tamil Language and Literature*. Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020.E-ISSN-2581-7140.
[7] Dayanidhi. *Alumai Thiran.* Kannadasan Pathipagam, 2013.
[8] Dharmaraj, J. *Penniyal.* Tensi Publications, Sivakasi.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல்

**முனைவர் ஐ. க. விஜி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-2019-0919**
**DOI: 10.5281/zenodo.14752736**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகில் வேறு எந்த நாடும் போற்றாத அளவுக்குப் பெண்ணைப் போற்றும் பெருமையுடையது நம்நாடு. "மங்கையராகப் பிறப்பதற்கே- நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பாடியுள்ளார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. ஆனால் மாதவம் புரிந்து பிறந்துள்ள பெண்கள் பலரும், இன்றைய சமூகத்தில் பெரும்பாலும் சமமாகவும், மரியாதையுடனும் நடத்தப்படவில்லை. ஆனாலும் தைரியத்தையும், நம்பிக்கையையும் ஆயுதமாக கொண்ட பெண்கள் இந்திய வரலாற்றில் வியக்க வைக்கும் வகையில் பல்வேறு செயல்களைப் புரிந்துள்ளனர். அவர்கள் தொடங்கி வைத்ததுதான் இன்று பெண்கள் பல்வேறு துறைகளில் கால்பதிக்க உதவி புரிந்துள்ளது. பேணும் தன்மையுடையவளையே பெண் என்கிறது தமிழ் வழக்கு. பெண்கள் ஆண்களுக்கு நிகராக சாதித்துக் கொண்டிருக்கின்றனர். வீட்டின் அடுப்பங்கரை முதல் வானில் நிலவு வரை பெண்களின் காலடி படாத இடமே இல்லை. 'ஆணுக்கு நிகரான பெண் என்பதை' விட "பெண்ணொருத்திக்கு ஒரு ஆண் நிகரில்லை" என்ற நிலையும் விரைவில் வரக்கூடும். என்னை பொருத்தமட்டில் அமைதியான சாந்தமானவனே பெண் என்பதை விட வீரமான துணிச்சலான விவேகம் கலந்த பெண்களே தமிழ் பெண்கள் வரிசையில் முக்கிய இடம்பெறுகின்றனர். இந்த உலகில் வாழும் மனிதனின் வாழ்க்கையில் கடைசி வரையிலும் தேடல் இருக்க வேண்டும். தேடலின் மத்தியில்தான் சாதனை படைக்க முடியும். வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்றால் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் சாதனைப் பயணத்தின் போது எத்தனையோ தடைகள், இடையூறுகள் வரினும் தன் அறிவின் துணைகொண்டு அவற்றை சமாளிக்க முடியும். போராடினால் தான் வெற்றி பெறமுடியும்.*

**குறிப்புச் சொற்கள்:** பெண்கள், வீரம், சமூகசேவை, பெண்ணடிமை, போராட்டம், அரசியல்.

**முன்னுரை**

இயற்கையின் படைப்பில் சகல உயிர்களும் உல்லா ஆற்றலும் தனித்தன்மையும் கொண்டு இவ்வுலகில இயங்கி வருகிறது. மனிதன் என்ற பரிணாமத்தை அடைந்து இன்று உலகையே கையில் வைத்து விண்ணையும், அறிவையும் ஆராய்ந்து வருகிறது. இந்த உலகில் மனிதனைப் படைக்கும் மாபெரும் சக்தியாகக் கண்ணில்பட்டத் தெய்வமாக, வாழும் கடவுளாக நம் முன்னர் பெண்கள் இருக்கின்றனர். வீட்டுப்படி தாண்டவிடாமல் இருந்த அந்த காலம் முதல்

விண்வெளிக்கு செல்லும் இந்த காலம் வரை சாதனைப் பெண்மணிகளின் பட்டியல் மிகவும் நீளமானது. பெண்கள் கல்வி அறிவு பெற்றிருந்தால் மட்டுமே குடும்பமும் சமூகமும் முன்னேறும் என்பதை உணர்ந்த சான்றோர்கள் பெண் கல்வியை வலியுறுத்தினர். பெண் விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே பெண் விடுதலை பெற முடியும் என்பதை,

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று**
**எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் (கும்மிப்பாட்டு)**

இக்கும்மி பாட்டின் வழியாக பாரதியார் பெண்கல்வியை வலியுறுத்தியுள்ளார்.

**தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல்**

எங்கோ ஒரு மூலையில் பிறந்து வளர்ந்து, புதுமுகங்களாக மாறி மாநிலத்தின் சாதனைப் பெண்களாக மாறிய பெண்களின் எண்ணிக்கை பல. தங்களின் உழைப்பு, விடாமுயற்சி, உள்ளிட்டவைகளால் தாங்கள் சார்ந்த துறைகளானச் சமூக சேவை, சுகாதாரம், விளையாட்டு, கல்லி, பொழுதுபோக்கு உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கி தங்களுக்கு மட்டுமல்லாது தாங்கள் சார்ந்துள்ள தாய்நாட்டிற்கும் பெருமைத் தேடி தந்துள்ளனர் பெண்கள். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என இருந்த நிலைமாறி இன்று அனைவரும் படித்து இராணுவம், விமானம், கடற்படை, மருத்துவம், பொறியியல், அரசியல் ஆகிய துறைகளில் தொடங்கி பெண்கள் இல்லாத துறையே இல்லை எனும் அறவுக்கு பெண்கள் இன்று முன்னேறி வருகிறார்கள். அறிவியலில் பெண்கள் (Wome in Science) என்பது பழங்காலம் முதல் இன்று வரை அறிவியலில் பெண்கள் ஆற்றியுள்ள பங்கினைக் குறிக்கும். பழங்காலம் முதலே பெண்கள் அறிவியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்து வந்துள்ளனர்.

**சார்லட் பள்ச் என்பவர், பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்று எடுத்துரைப்பார் (முனைவர். ஞா. அந்தோணி சுரேஷ். ப. 10)**

பாலினம் மற்றும் அறிவியலில் ஆர்வமுள்ள வரலாற்று ஆய்வாளர்கள், அறிவியலில் பெண்களின் சாதனைகள், அதை முடிப்பதற்கான பெரு முயற்சிகள் எனப் பதிவு செய்து வைத்துள்ளனர். தனது சாதனைகளுக்காக அவர்கள் எதிர்கொண்ட தடைகள், அவர்களின் பணிக்காகச் செயல்படுத்திய உத்திகள், குழு ஆய்வுகள், முக்கிய அறிவியல் இதழ்களிலும் பிற வெளியீடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டமை ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. சமூகம், வரலாறு, விமர்சனம் இவையனைத்தையும் தாண்டி, தன் அறிவுசார் ஒழுக்கத்தை வெளிப்படுத்தி தனது உரிமையை நிலைநாட்டியுள்ளனர். 2020 இல் உலகம் மாறிவிட்டது. ஆனால் பெண்களுக்கு ஒவ்வொரு நாளும் உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. பெண்கள்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

செயல்பாடுகளின் போக்கை மாற்றியுள்ளனர். பணிநிலைகளை மாற்றியுள்ளனர். வரக்கூடிய தலைமுறைகளுக்கு இந்த நடைமுறை நிலையாக இருக்கும்.

**மருத்துவத்தில் பெண்கள்**

முந்தைய பல நாகரிகங்களில் பெண்கள் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருந்தனர். பண்டை கிரேக்கத்தில் பெண்களுக்காக இயல் மெய்யியலில் வாய்ப்புகள் இருந்தன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பெண்கள் இரசவாதம் என்னும் துறையில் பங்களித்துள்ளனர். இடைக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கான இடமாக அருட்சகோதரி மடங்கள் இருந்தன. இது போன்ற சில சமூகங்களில் பெண்கள் அறிவார்ந்த ஆய்வுப் பணிகளில் ஈடுபட வாய்ப்புகள் வழங்கப்பட்டன. பதினோராம் நூற்றாண்டு இடைக்காலப் பல்கலைக் கழகங்கள் தோற்றம் கண்டபோதே, பெரும்பாலான பெண்கள் பல்கலைக்கழகக் கல்வியிலிருந்து விலக்கப்பட்டனர். மருத்துவத்துறையில் பெண்கள் கல்வி கற்பதற்கான சுதந்திரம் மற்ற இடங்களில் இருந்ததைக் காட்டிலும் இத்தாலியில் அதிகமாக இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் அறிவியல் துறை ஆய்வுகளில் ஈடுபட்டு பல்கலைக்கழகத் தலைவராக உயர்ந்த முதல் பெண் அறிவியலாளர் லாரா பாசி ஆவார். இவர் இத்தாலியைச் சேர்ந்த அறிவியலாளர் ஆவார். பதினெட்டாம் நூற்றாண்டில் பாலின வரையறைகள் பெரிதாக இருந்தபோதும் பெண்கள் அறிவியல் துறையில் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டனர். தான் வாழும் சமூகத்தில் பெண்களின் சாதனைகள் விலக்கி வைக்கப்பட்ட போதும் படித்த சமூகங்கள் பெண்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் மகளிர் கல்லூரிகள் அதிகரிக்கத் தொடங்கின. அதன்மூலம் பெண்களுக்கானக் கல்வியும் பெண் அறிவியலாளருக்கான வேலை வாய்ப்புகளும் அதிகமாயின. 1903ஆம் ஆண்டில் இயற்பிலுக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அறிவியலாளர் மேரி கியூரி ஆவார். மேலும் 1911 இல் வேதியியலில் இவரின் கதிரியக்கம் குறித்த ஆய்வுகளுக்கு நோபல் பரிசு பெற்றார். இரட்டை நோபல் பரிசு பெற்ற முதல் பெண் இவராவார். 1901 முதல் 2010 வரை நாற்பது பெண்கள் இதுவரை நோபல் பரிசு பெற்றுள்ளனர். இவற்றில் பதினேழு பெண்கள் இயற்பியல், வேதியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

**சௌமியா சுவாமிநாதன் (சுகாதாரம்)**

உலக சுகாதார அமைப்பின் (World Health Organization - WHO) ஒரு துறையின் தலைமை விஞ்ஞானியாக சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னால் இந்த அமைப்பின் துணை பொது இயக்குநர் பதவியை கடந்த 2017ஆம் ஆண்டு முதல் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. மருத்துவத்தில் மேற்படிப்பு பயின்று இருக்கும் இவர் காசநோய், எய்ட்ஸ் பற்றிய ஆய்வு மற்றும் விழிப்புணர்வு திட்டங்களில் பெரும் பங்காற்றியுள்ளார். இவர் பசுமைப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் மகள் ஆவார்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**வீரத்தில் பெண்கள்**

**வேலுநாச்சியார்**

1746- ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்து வடுநாதரை மணந்து பட்டத்து ராணியாக மகுடம் சூடி பெருமை பெற்றார் வேலுநாச்சியார். தன் கணவரை கொன்ற ஆங்கிலேய படைதளபதிகளான ஸ்மித் மற்றும் பாஞ்சோர் ஆகியோரையும் வெற்றி கொண்டார். விருப்பாச்சி கோபால நாயக்கரிடம் நட்பு கொண்டு மைசூரின் ஹைதர் படையை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார். 1780 முதல் 1788 வரை நேரடி ஆட்சியாளராக சிறப்பாக ஆட்சி செய்தார். 1796 ஆம் ஆண்டு 66 வயதில் மரணமடைந்தார். சிறப்பான ஆட்சியை வழங்கிய வேலுநாச்சியார் அவர்கள் மக்களுக்கு சிறப்பான ஆட்சியை வழங்கி திறம்பட ஆட்சி செய்ததுடன் ஆங்கிலேயரை எதிர்த்து நின்று வீரமுடன் செயல்பட்டார். காந்தியோ உடன் மற்ற எந்த எழுச்சி சக்தியும் உடன் இல்லை. ஆனால் வீரம் ஆளும் நிர்வாகம் மக்கள் நலன் ராஜநிர்வாகம் அறிந்து வைத்திருந்தார். அவரின் அணுகுமுறை சிறப்பான வழிகாட்டியாக இருந்தது. இவரை பார்த்து பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். முதல் எழுச்சி வீராங்கனையாக இருந்த இவர் இந்திய விடுதலை போராட்டவாதிகளுக்கெல்லாம் முன்மாதியாக இருந்தார். எனல் அது மிகையாகாது. ஆறாம் அறிவற்ற விலங்கினங்களுக்கு இயற்கையாகச் சில உணர்வுகள் அமைந்திருக்கின்றன. ஆனால் மனிதரை அண்டி அவர் போடும் உணவுக்காக அடிமை வாழ்வுக்குப் பழகிய நாகரிகம் விலங்குகளை வந்தெய்திய பிறகு, அவை மனிதரைவிட்டுப் போகத் துணிவதில்லை. இயல் பூக்கங்கள் மங்கிப் போகின்றன போலும், இத்தகைய அண்டிப் பிழைக்கும் சார்புநிலை நாகரிகத்தில் பெண்ணும் தனித்தன்மையை இழந்து வந்திருக்கிறாள் என்கிறார் இராஜம் கிருஷ்ணன். (எழிலரசு. ப. 71)

**சாவித்திரிபாய் பூலே**

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பெண்களுக்கான உரிமை மற்றும் கல்வி போராட்டத்தில் பங்கேற்று பெண்களின் உரிமையை நிலைநாட்ட போராடிய பெண்களில் முக்கியமான ஒருவராக சாவித்திரிபாய் பூலே திகழ்ந்தார். இவர் ஜனவரி 3, 1931ஆம் நாள் பிறந்தார். ஜோதிராவ் பூலே என்னும் சுதந்திர போராட்ட வாதியின் மனைவியாவார். பனிரெண்டாம் வயதில் திருமணம் செய்த சாவித்திரிபாய் பூலே கணவரிடம் கல்வி கற்று பெண்களின் கல்வி மற்றும் உரிமைக்கு முதல் குரல் கொடுத்தவர். சாவித்திரிபாய் பூலே பெண்களுக்காக முதல் பள்ளியை கணவருடன் இணைந்து பூனேவில் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தொடங்கினார். சாதிய வெறியையும் அத்துடன் இணைந்து பாலின வேறுபாடுகள் பெண்கள் மீது காட்டுவதனை எதிர்த்து குரல் கொடுத்தார். முக்கிய பெண் சீர்த்திருத்தவாதி 1840 ஆம் ஆண்டுகளில் கத்தியில்லை ரத்தமில்லை காந்தியும் இல்லை. ஆனால் சாவித்திரி இருந்தார். எந்த ஒரு சிப்பாய் கலகமும் நடைபெறவில்லை. ஆனால் இந்தியாவில் ரௌத்திரம் பழகும் திறம் இருந்தது. இந்திய விடுதலை போராட்டத்திற்கு முன்பே சமூக சீர்த்திருத்தத்தை நாட்டில்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

விதைத்தார். ஒரு பெண்ணாக இருந்து பழமை வாய்ந்த சமூகத்திற்கு பாடம் கற்பிப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பதனை நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. சாவித்திரிபாய் பூலே குழந்தைகள் இல்லாதபோதும் இரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தார். அவர் எழுதிய கவிதை புத்தகத்தில் பெண்களுக்கான எழுச்சிமிகு கவிதைகளைப் படைத்தார். சாவித்திரி மற்றும் வேலுநாச்சியார் இந்த தேசத்தில் எந்தவித முன்னேற்றமும் அற்ற ஒரு சமுதாய சூழலில் வேறுவேறு சூழல்களில் பிறந்தவர்கள். அவர்களின் மூலம் சிறந்த நிர்வாகம் எது என்பதையும் எது மக்களைக் கொண்டு செல்லும் நிர்வாகம் என்பதையும் அறிந்து கொள்ளலாம். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் பிறந்த ஒரு ஆட்சியாளர் பெண்மணியும் ஒரு சமூக சீர்திருத்த பெண்மணியின் வாழ்க்கை மற்றும் அவர்களின் செயல்பாடுகளைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். தேசத்தின் அனைத்து மக்களுக்கும் இவர்கள் ஒரு பாடமாக அமைத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சமூக சேவையில் பெண்கள்**

**சின்னப்பிள்ளை**

மதுரை மாவட்டத்தை சேர்ந்த 66 வயதான சின்னப்பிள்ளை கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னை சமூகப் பணிகளில் ஈடுபடுத்தி வருகிறார். களஞ்சியம் என்ற பெயரில் மகளிர் சுய உதவிக்குழு அமைப்பை நிர்வகித்து வருகிறா. தமிழகம் முழுவதும் சுமார் 2000 மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்க உதவி இருக்கிறார். மரபுசார் வேளாண்மை மீது கொண்ட ஈடுபாட்டால் அது குறித்த விழிப்புணர்வையும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார். கடந்த 2000 மாவது ஆண்டில், 'ஸ்த்ரீ புரஸ்கார்' விருதை இவருக்கு அன்றைய பிரதமராக இருந்த திரு. அடல்பிகாரி வாஜ்பாய் வழங்கி கவுரவித்தார். கிராமப்புறங்களில் மட்டுமே இயங்கிக் கொண்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை நகரத்துப பெண்களும் பயன்படுத்தலாம் என்ற தெளிவைக் கொண்டு வந்தவர் சின்னப்பிள்ளை. இப்போது 12 மாநிலங்களைச் சேர்ந்த 250 கூட்டமைப்புகளுக்குத் தலைவியாக முதிய வயதிலும் ஓடி உழைத்து வருகிறார் சின்னப்பிள்ளை. மத்திய அரசு இவரது சேவையை பாராட்டி 2019 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது. வீட்டு வேலைகளை மட்டும் தான் பெண்களால் செய்ய முடியும் என்ற தவறான எண்ணத்தில் பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடவில்லை. மனுதர்மம் பெண்களைப் போற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அதன்படி பெண்ணை பூஜிக்கப்படும் இடத்தில் தேவர்கள் மகிழ்கிறார்கள் (முனைவர் ந. அனிதா. ப.23)

**இசைவாணி**

இந்தியாவின் ஒரே பெண் கானா பாடகி என்ற பெருமை இசைவாணிக்கு உள்ளது. தமிழகத்தில் வடசென்னையைச் சேர்ந்த இவர் ஆண்கள் மட்டும் ஆதிக்கம் செலுத்தி வரும் கான பாடல் துறையில் பல ஆண்டுகளாகச் சாதித்து வருகிறார். பிரபல ஆண் கானா பாடகர்கள் பாடிய அதே மேடையில் இவர் பாடுவதே ஒரு சாதனைதான். பழைய நடைமுறையை

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

இசைவாணி உடைத்ததை அடுத்து மற்ற இளம்பெண் கானா பாடகர்களும் இப்போது களம் இறங்கியுள்ளனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவிய வேளாண்மைச் சமூகம், பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்த அடிப்படையான மாற்றங்கள் அடையத் தொடங்கியது. இந்த மாற்றங்களை இக்கால இலக்கியங்கள் பிரதிபலித்தன. மரபான இந்துப் பண்பாட்டைச் சீர்படுத்த முனைந்தார்கள். இதில் பெண்களின் முன்னேற்றம் முக்கிய இடம்பெற்றது. புதிய இலக்கியத்தை முதன்முதலாகப் படைத்த வேதநாயகமும், மாதவை யாவும் பெண்கல்வி, விதவை மறுமணம் பற்றி பேசினார்கள். (சா. அகஸ்டின். ப.2)

**போராட்டத்தில் பெண்கள்**

**பில்கிஸ்**

82 வயதான பில்கிஸ் சர்ச்சைக்குரிய குடிமக்கள் சட்டத்திற்கு எதிராக நடந்த பெண்கள் போராட்டத்தில் அமைதியாகப் பேராடியவர். தலைநகரில் முஸ்லீம்கள் வாழும் ஷாஹீன் பாக் பகுதியில் அதிக நாட்கள் போராட்டம் நடந்த இடத்தில் போராட்டத்தில் முக்கியமானவராக அவர் இருந்தார். 'ஒடுக்கப்பட்டவர்களின் குரல்' என்று அவரை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ரானா அயூப் குறிப்பிட்டுள்ளார்.

**ரிதிமா பாண்டே**

ரிதிமா பாண்டே பருவநிலை மாற்றத்துக்கு எதிரான செயல்பாட்டாளர். பருவநிலை மாற்றத்தின் பாதிப்பைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி 2019இல் தன் 9வது வயதில் வேறு 15 சிறுவர் மனுதாரர்களுடன் சேர்ந்து வழக்கு தொடர்ந்தார். ஐந்து நாடுகளுக்கு எதிராக அவர் ஐ.நாவில் வழக்கு தொடர்ந்துள்ளார். ரிதிமா இப்போது சர்வதேச மாநாடுகளில் பங்கேற்று மற்ற மாணவர்களுக்கு அதிகாரம் கிடைக்க உதவுகிறார். தன்னுடைய வருங்கால தலைமுறையினரின் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதற்காக ரிதிமா பாடுபட்டு வருகிறார். உலகெங்கும் உள்ள பெண்கள் பல்வேறுத் தழைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும், ஆண் பெண் இருவருக்குமான அதிகாரங்கள் முறையாகப் பிரியாமல் இருப்பதை எதிர்த்து போராடிக் கொண்டே இருக்கிறார்கள். தங்களை நல்ல நிலையில் நிறுத்திக் கொள்வதற்கும், தங்களைப் பாதிக்காதவகையில் கொள்கைகளை உருவாக்கவும் பெண்களுக்கு அதிகாரம் அவசியமாகிறது. (இரா. அனுசுயா. ப. 36)

**முடிவுரை**

பெண்ணடிமை எனும் விலங்கை உடைத்து எறிந்து இன்றைய நாகரீக உலகில் பெண்கள் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். பெண்ணடிமை என்ற இரும்புக் கூண்டிலிருந்து இன்றைய பெண்கள் சுதந்திர பறவைகளாக சிறகடித்து பறக்கின்றனர். காவல்துறை, சட்டம், அரசியல், தகவல்தொடர்பு துறை உட்பட அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் பெரிய பதவிகளை வகித்து திறம்பட செயல்படுகின்றனர். மருத்துவத் துறையிலும் பெண்கள் வியக்கத்தக்க சாதனைகளைப் படைத்து வருகின்றனர். போக்குவரத்து

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

துறையிலும் பெண் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் வந்துவிட்டனர். விளம்பர துறையிலும் பெண்கள் நல்லநிலையை அடைந்துள்ளனர். குடும்பப் பெண்கள் தங்கள் வீட்டு கடமைகளை முடித்துவிட்டு பகுதிநேர வேலைக்குச் சென்று கணவரின் கஷ்டத்தில் பங்கெடுக்கின்றனர். வேளாண்மை துறையிலும் பெண்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். படிப்பிலும் மாணவிகள் முதலிடத்தை பிடித்து ஒவ்வொரு ஆண்டும் சாதனை படைத்து வருகின்றனர். விளையாட்டு துறையிலும் பெண்கள் பங்கேற்று இந்தியாவிற்கு பதக்கங்களைப் பெற்று தந்துள்ளனர். இதுபோல் பல துறைகளிலும் பெண்களின் முன்னேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இவ்வாறு பண்டைய காலத்தை விடவும் தற்காலத்தில் பெண்களின் வாழ்வியல் சிறப்படைந்துள்ளதை நாம் உணரலாம்.

**குறிப்புகள்**

[1] அகஸ்டின், சா. & கலாவதி, த. சே. முனைவர். "பெண்ணியக் கட்டமைப்பும் அம்மா வந்தாளில் பெண்ணியக்கட்டுடைப்பும்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb. 2020. E-ISSN-2581-7140.

[2] அந்தோணி சுரேஷ், ஞா. முனைவர். "சிலம்பில் மகளிர் இருத்தல் நிலைகளும் பெண்ணியக் கட்டுடைப்பும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[3] அனிதா, ந. முனைவர். "சமயங்களும் பெண் விடுதலையும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[4] அனுசுயா, இரா. முனைவர். "பெண்களும் ஆளுமைத் திறனும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[5] இராஜம் கிருஷ்ணன். *காலந்தோறும் பெண்.* நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1994.

[6] எழிலரசி, மி. சு. "விவிலியத்தில் பெண்ணியக் கூறுகளும் வீரப் பெண்களும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, Vol.2, Special Issue 3, Vol.1, Feb.2020. E-ISSN-2581-7140.

[7] தயாநிதி. *ஆளுமைத் திறன்.* கண்ணதாசன் பதிப்பகம், 2013.

[8] தர்மராஜ், ஜே. *பெண்ணியல்*, டென்சி பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.